# 2.3 ஒளியனுபவம் பெறுவோம்



இங்கு மத்தேயு நற்செய்தி 17:1-13 உரையாடல் பாணியில் எழுதப்பட்டுள்ளது. திருவிவிலியத்தில் இப்பகுதியைக் கண்டிப்பாக வாசிக்கவும்.

பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீடரும் ஒன்று கூடுகின்றனர்.

பேதுரு :- இயேசு திரும்பவும் நம் மூவரை மட்டும் இங்கு வரும்படி அழைத்திருக்கிறாரே! அந்த மலையுச்சிக்கு சென்று வரவேண்டியிருப்பதாக் கூறினார். ஏனோ தெரியவில்லை.

யாக்கோபு :- ஆண்டவர் அடிக்கடி மலையுச்சி சென்று செபித்து, கடவுளுடன் தனித்திருப்பது வழக்கந்தானே!

யோவான் :- உண்மைதான்; ஆனால் இம்முறை ஏதோ ஒரு முக்கிய செயல் நடைபெறப்போகிறதுபோல் ஒரு எண்ணம் தோன்றுகிறது. நம்மையும் அழைத்திருக்கிறார் அல்லவா?

யாக்கோபு :- ஆம், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

பேதுரு :- ஆறு நாட்களுக்கு முன்புதானே நாம் எதிர்பார்த்திருந்த மெசியா அவர்தான் என்பதை அறிந்தோம்.

யோவான் :- அந்த முக்கிய செய்தியைக் கூட அவர் யாருக்கும் கூறவேண்டாம் என்று கூறியமை நினைவுக்கு வருகிறதா?

யாக்கோபு :- ஆம். ஞாபகம் இருக்கிறது. சிலவேளைகளில் ஆண்டவர் செய்யும் சில செயல்களைப் புரிந்துகொள்வது கடினமாகவே இருக்கிறது

பேதுரு :- ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

யாக்கோபு :- ஆண்டவரே மெசியா என்று நாம் உணர்ந்து கொண்டதும் எவ்வளவு மகிழ்வுற்றோம். ஆனால் உடனேயே அவர் தமது மரணத்தைப் பற்றி விளக்கத் தொடங்கி விட்டாரல்லவா?

பேதுரு :- ஆண்டவர் எப்போதும் கடவுள் சித்தத்தை அறிந்து செயல்படுபவர் அல்லவா?



இலவச விநியோகத்திற்காக

யோவான் :- ஆம், அவர் மரணத்தைப் பற்றிக் குறிப்பிட்டதில் ஏதாவது முக்கியத்துவம் இருக்க வேண்டும்.


யாக்கோபு :- அப்போ இன்றும் மரணத்தைப் பற்றி ஏதும்!

பேதுரு :- சரி சரி, அது போதும்; வாருங்கள். அதோ ஆண்டவர் கூப்பிடுகிறார்.
(மலை ஏறுகின்றனர்.)
(சிறிது நேர அமைதிக்குப் பின்னர்)

பேதுரு :- அப்பாடியோ, இது எத்தனை உயர்ந்த மலை; ஏறும்போது களைப்பாயிருக்கிறதே. ஆண்டவரோ எவ்வித சிரமுமின்றி நடந்து செல்கிறாரே!.

யோவான் :- ஆம் பேதுரு அண்ணா, இப்போது உங்ளுக்கு வயதும் சிறிது அதிகந்தானே!
(மலையுச்சியை சென்றடையும் வேளை)

யாக்கோபு :- ஆ.. இது என்ன பிரகாசம்! இந்த ஒளியினால் என் கண்கள் கூசுகின்றனவே.



யோவான் :- ஆண்டவரைப் பாருங்கள். அவருடைய தோற்றம் முற்றிலும் மாறுகிறது. அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்கின்றது. அவருடைய ஆடை கூட எத்தனை வெண்மையாய் இருக்கிறது. இது ஒர் அற்புதமான செயல்; இப்படிப்பட்ட வெண்மையான ஒளியை நான் முன்னர் கண்டதே இல்லை.


இலவச விநியோகத்திற்காக

யாக்கோபு:- இதோ பாருங்கள்; இது என்ன புதினம்; ஆண்டவர் வேறு இருவருடன் பேசிக் கொண்டிருக்கிறாரே.

பேதுரு :- சிறிது அச்சமாக இருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள். நான் ஆண்டவரிடம் விசாரிக்கிறேன். என்ன சொல்வாரோ தெரியவில்லை. (சிறிது நேரத்திற்குப் பின்பு)

பேதுரு :- ரபி, யார் இவர்கள்? முன்னர் கண்டதில்லையே! இவர்கள் எப்படி இங்கே!

இயேசு :- இவர்கள் மோசே மற்றும் எலியா இறைவாக்கினர் ஆவர். மோசே எழுதியவையும், எலியா கூறிய இறைவாக்குகளும் இன்று நிறைவேறுகின்றன. எனவே, அவை நிறைவேறும் இவ்வேளையில் இவர்கள் திரும்பவும் நம் மத்தியில் காட்சியளிக்கின்றனர்.



வாசிக்கவும்

லூக்கா 24:44
(இயேசு உயிர்த்தபின் கூறியது)

பேதுரு : ஆம், ரபி புரிகிறது. இது ஒரு முக்கிய சம்பவம்; இது ஒரு முக்கிய வேளை. நாம் இங்கேயே தங்கியிருப்போம். உமக்கொரு கூடாரமும், மோசேக்கும் எலியாவுக்கும் வேறு கூடாரங்களும் அமைப்போம்.

(திடீரென வெண்மேகம் மலையுச்சியை மூடிக்கொள்கிறது.)

பேதுரு : இது கடவுளின் பிரசன்னத்தின் அடையாளம். இதைப்போலவே பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மோசே சீனாய் மலையிலும், எலியா கர்மேல் மலையிலும் கடவுளின் உன்னத பிரசன்னத்தை அனுபவித்திருந்தனர். இவ்வேளையில் அவர்கள் இருவரும் ஆண்டவர் இயேசுவுடன் சேர்ந்து கொண்டுள்ளனர்.

யோவான் :- அது என்ன சத்தம்?

பேதுரு :- யாரோ பேசுவது போல் உள்ளது; கவனமாகக் கேளுங்கள்.

*அசரீரி ஒலிக்கின்றது.*
***என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவருக்கு செவிகொடுங்கள்.***

(மோசேயும் எலியாவும் இவ்வேளையில் மறைகின்றனர்)

யாக்கோபு :- அந்த வார்த்தைகள் நமக்கு கூறப்பட்டதைப் போன்றல்லவா இருந்தன.

பேதுரு :- நீங்கள் சொல்வது சரிதான்; தோற்றம்மாறிய இயேசுவை கடவுள் அறிமுகப்படுத்திய வார்த்தைகள் அவை: ஆண்டவர் இயேசுவை 'என் அன்பார்ந்த மகன்' என்று குறிப்பிட்டார்.
அவருக்குச் செவிசாய்க்கும்படி கூறினார் அல்லவா?

யோவான் :- சரிதான், பேதுரு அண்ணா, முன்னர் இவர்தான் வரப்போகும் மெசியா என்று நீங்கள் கூறிய உண்மையை இன்று தாமே உறுதிப்படுத்தி விட்டார் அல்லவா!

பேதுரு :- ஆம் தம்பி; இன்று இறைமைந்தரின் மகிமையை நாம் தெளிவாகக் கண்டுகொண்டோம். இவர்தான் மெசியா என்பது உறுதி.
*சிறிது நேரம் அமைதி நிலவுகிறது. அவர்கள் நடுவில் இருந்த அமைதியைக் கலைக்கிறார் இயேசு.*

இயேசு :- மனிதகுமாரன் இறந்து உயிர்த்தெழும்வரை நீங்கள் கண்டதை எவருக்கும் சொல்லாதீர்கள்.
(திரும்பவும் அமைதி நிலவுகிறது.)

மூன்று சீடரும் மலையுச்சியிலிருந்து கீழே இறங்கிய பின்னரும் வெகுநேரம் வியப்பில் ஆழ்ந்திருந்தனர். இது அவர்கள் சிறிதளவேனும் எதிர்பாராத ஒரு நிகழ்வாகும். ஆனாலும் இது வார்த்தைகளால் விபரிக்க முடியாதவொரு உண்மைச் சம்பவமாகும். மூவரும் நடந்தவை பற்றி மீண்டும் எண்ணிப் பார்த்தனர்.

பேதுரு :- நாம் கடவுளின் மைந்தரை அவரின் முழு மகிமையோடும் கண்டோம். இதனை கடவுளே இன்று உறுதிப்படுத்தினார் அல்லவா?

யோவான் :- மோசேயையும் எலியாவையும் இன்று நாம் தரிசித்தமை பெரிய பாக்கியம்.

யாக்கோபு :- இயேசுவே நிச்சயமாக நாம் எதிர்பார்த்திருந்த மெசியா என அறிந்து கொண்டோம்.

யோவான் :- மோசேயும் எலியாவும் இதனை இன்று உறுதிப்படுத்தி விட்டனர்.

பேதுரு :- அவர் இவ்வுலகில் இறக்க நேரிட்டாலும் திரும்பவும் உயிர்த்தெழுவார் என்பதும் உறுதி. அதுவரை இதனைப்பற்றி பேசக்கூடாதென தெளிவாகக் கட்டளை கொடுத்துள்ளார். உரிய நேரத்தில் ஆண்டவர் அனைத்தையும் வெளிப்படுத்துவார்.



*இலவச விநியோகத்திற்காக*

## மலையுச்சி அனுபவம்


இந்த மலையுச்சியில் நடைபெற்ற ‘தோற்றம் மாறுதல்’ பெற்றுத் தந்த (மறுரூப) அனுபவத்தின் பின்னர் ஆண்டவர் தம் முகத்தை எருசலேம் நோக்கித் திருப்பினார். எருசலேமில் உண்மைக்கு இடமில்லை. எனவே தனக்கு மரணம் ஏற்படுவது உறுதியென அவர் நன்கு உணர்ந்திருந்தார். அவரது சிலுவை மரணம் உலக மீட்பின் உன்னத அடையாளமாகத் திகழப்போவதை எவரும் அறிந்திருக்கவில்லை.

‘பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்’. (யோவான் 3:14-15)

இந்த மலையுச்சி நிகழ்வு சீடருக்கு ஒரு புதிய ஆன்மீக அனுபவமாயிற்று. இன்று நாமும் ஆன்மீக அனுபவங்களுக்கூடாக ஆண்டவரின் ஒளியைப் பெற்று ஒளியின் பிள்ளைகளாகச் செயற்படுவதற்கு அழைக்கப் படுகிறோம்.

**ஒளியின் பிள்ளைகளின் சில செயல்கள்.**

படத்திலுள்ள வெற்றிடங்களில் நீங்கள் செய்யக்கூடியவற்றை எழுதுங்கள்



**செயல்பாடு**

1. இயேசு தம் தோற்றம் மாறுதல் மூலம் பெற்ற (மறுரூப) அனுபவம், அவர் தம் வாழ்வைத் தியாகபலியாக ஒப்புவிப்பதற்கு எவ்வாறு உதவியிருக்கலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?
2. உம்மை மறுரூப மலையில் இருந்த 3 சீடரில் ஒருவராக எண்ணிக்கொண்டு, நீர் மலையுச்சியில் இருந்து கீழே இறங்கி வந்த பின்னர் ஒளியின் மகனாக. மகளாக எவ்வாறு அன்றைய யூத சமுதாயத்தில் செயல்பட்டிருப்பீர் என்று எழுதுக.
3. ‘மலையுச்சி அனுபவம் ஒரு ஆன்மீக அனுபவமாகும்’ இதனை விளக்குக.